# திராவிடப் போராளிகள்

40 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# ‘கொடிக் கவிதை’ கனகம்மை!

*‘சுயமரியாதைக்காரன், ஏகாதிபத்தியங்கள் அனைத்திற்கும் எதிரி! தோழர் கனகம்மையார் இராமசாமி முழக்கம்’ என்ற தலைப்போடு 20.10.1945 தேதியிட்ட ‘குடிஅரசு’ ஏட்டின் முதல் பக்கத்தில் வெளியான உரையை ஆற்றிய கனகம்மையார், நாம் அறிந்திராத திராவிடப் போராளிகளில் ஒருவர்.*

கனகம்மையார் சிறந்த சுயமரியாதைச் சிந்தனையாளர். ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், சமூக அநீதிகளின் மேல் கோபமும் கொண்ட சமத்துவப் பார்வையும் அவரது தனிச்சிறப்பு. திராவிட இயக்கத் தலைவர்களால் மதிக்கப்பட்டவர். பேச்சிலும் எழுத்திலும் புதியதொரு வீச்சை வெளிப்படுத்திய கனகம்மையார் சுயமரியாதை மாநாடுகளில் உரையாற்றினார்.

அவரது உரைகளில் சமூக, பொருளாதார, அரசியல் செயல்பாடுகள் பற்றிய கருத்துகளை அஞ்சாமல் வெளிப்படுத்தினார். அவரது இலக்கிய ஈடுபாடும் அதை வெளிப்படுத்தும் தர்க்க அறிவும் வியப்புக்குரியது. அவரது வாழ்க்கைக் குறிப்புகளில் சில வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன.

## தமிழருக்கு இராமாயணம் வேண்டாம்!

1944-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் தேதியன்று சென்னையில் தோழர் கே.கே.நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 5-வது சுயமரியாதை மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றியபோது தந்தை பெரியாரை ‘தமிழ்நாட்டுத் தனிப்பெருந் தலைவர்’ என்று குறிப்பிட்ட கனகம்மையார், இராமாயணம் பற்றி முன்வைத்த கருத்துகள் இன்றும் பொருந்துவன.

“வடநாட்டுக் காவியங்களும் புராணங்களும் தமிழ்நாட்டில் தோன்றிய பின்னர் தமிழ் நூல்கள் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றன. ஆதலால், இராமாயணம் எந்தவிதத்தாலும் தமிழரால் ஆதரிக்கத் தக்கதல்ல என்பதுதான் எனது கருத்து. நமக்குள்ளேயே போர்? ஆம்! இராமர் என்றைக்குத் தென்னாடு வந்தாரோ அன்றே சகோதரப் போர்கள் மூண்டன அல்லவா? வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் மூண்டது. வாலி மாண்டான். அதைப் போலவே தென்னிலங்கையில் இராவணனுக்கும் விபீஷணனுக்கும் விரோதம் மூண்டது. விபீஷணன் காட்டிக் கொடுத்தான். இராவணன் மாண்டான்.

ஒருக்கால் இராவணனும் இராமனும் ஆரியரே என்று விவாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் இராமாயணம் ஆரிய கதைதானே. அதையேன் தமிழர் பயபக்தியுடன் படித்துப் போற்ற வேண்டும். மேலும், ஆரிய மன்னனாகிய இராமரை நாம் ஏன் கடவுளாகக் கொள்ளவேண்டும்”.

## பிராமண துவேஷத்துக்கு மறுப்பு

திராவிட இயக்கத்தின்மீது பிராமண துவேஷம் என்ற அவதூறு இப்போதும் வீசப்படுகிறது. அதற்கு கனகம்மையார் அன்றே பதில் கூறியுள்ளார்.

“பிராமணர்கள் மீது நமக்கு எள்ளளவேணும் வெறுப்போ. துவேஷமோ கிடையாது. ஆனால், பிராமணியத்தின் கொடுமைகளைத் தொலைப்பதே நமது கருமமும் தருமமும் ஆகும். கொசு வலைக்குள் தூங்குவது எப்படிக் கொசுதுவேஷம் ஆகாதோ அதைப் போலவே அடிமைத்தனத்தை அகற்றுவது ஆரியத்துவேஷம் ஆகாது.

மனிதருக்குள் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கும் வருணாசிரமதருமம் இருக்கும் வரையில் வகுப்பு துவேஷம் இருந்தே தீரும். ஒரு சாதி தீண்டப்படாதது. ஒரு சாதி பார்க்கப்படாதது. ஒரு சாதி தெய்வீகம் வாய்ந்தது. ஒரு சாதி ஆளப்பிறந்தது. ஒரு சாதி உழைக்கப் பிறந்தது என்றெல்லாம் கூறுகின்ற சாஸ்திரமும் அந்த சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்ற சமூகமும் இருக்கிற வரையிலும் வகுப்பு துவேஷம் இருந்தே தீரும் அல்லவா?

சாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்று நாம் கூறுகிறோம். எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என பிரச்சாரம் செய்கிறோம். ஹிட்லர் இனச் செருக்கால் அழிந்தான். யூதர்கள் தமது ஜாதித் திமிரால் ஜெர்மனியினின்றும் துரத்தப் பட்டார்கள். இனச்செருக்கும் ஜாதித் திமிரும் நாசத்திற்குக் காரணங்களாக முடிகின்றன. ஆதலால், இங்கே ஜாதிகள் வேண்டாம். இனச் செருக்கும் வேண்டாம் எனச் சொல்லுகிறோம். இது சாதித் துவேஷம் ஆகுமா? சிந்தித்துப் பாருங்கள்”.



ஓவியம் : ரவி பேலட்

## திராவிட இயக்கக் கொடிக் கவிதை

அதேபோல் இலக்கியத் திறன் வாய்ந்த கனகம்மையார் திராவிட இயக்கக் கொடி பற்றி இயற்றிய கவிதையும் ‘குடிஅரசு’ ஏட்டில் வெளியாகி உள்ளது.

**‘ஆடு கொடியே’!**

**ஆடு கொடியே-பறந்தாடு கொடியே-இனி**
**ஆரியம் ஒழிந்த தென்று ஆடு கொடியே.**
**நானிலத்தி லேமுதலில் நாகரீகத்தை-நிலை**
**நாட்டினான் தமிழன் என்று ஆடு கொடியே.**
**வானிலத்தி லேஎழுந்து ஆடு கொடியே-இனி**
**வாழ்வு உண்டு தாழ்விலையென்**
**நாடுகொடியே (ஆடு)**
**ஒன்றே குலமுமென ஆடு கொடியே-தனி**
**ஒருவனே தேவன் என்று ஆடு கொடியே.**

*நன்றாய்த் தெளிந்தோமென்று ஆடு*
*கொடியே-இனி*
*நமனுக்கும் அஞ்சோம் என்று ஆடு*
*கொடியே. (ஆடு)*
*கண்மூடிப் பழக்கமெனும்*
*காரியமெலாம்-நெடுங்*
*காலமாக வந்திருந்தும் தன்மதிப்பினால்*
*மண்மூடிப் போயினவென்*
*நாடுகொடியே-இவை*
*மறுபடியும் வாராவென்று ஆடு*
*கொடியே. (ஆடு)*
*இந்தியை ஒழிப்பதிலே ஈடுபட்டதில்-நிகர்*
*இல்லையென்றே தலைவராய்ப் புகழ்பரப்பிச்*
*செந்தமிழைக் காப்பதற்குச் சிறைபுகுந்த—*
*அவர்.*
*சிறப்பினைச் சொல்லிச் சொல்லி ஆடு*
*கொடியே. (ஆடு)”*

1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்து ‘இனி சுயமரியாதை இயக்கம் செய்ய வேண்டிய பணிகள்’ என அவர் பட்டியல் இட்டவைதான் இன்றுவரை நமது குறிக்கோள்களாக உள்ளன.

## தொண்டாற்றுவதே பேரானந்தம்!

“ஆலயங்கள் எல்லோருக்கும் பொதுவாகத் திறக்கப்படவேண்டும். கோயில்களில் ஜாதிக்கு ஒரு இடம் வகுக்கும் கொடுமை ஒழிய வேண்டும். எக்குலத்தவரும் கோயிலுக்குள் நேரே சென்று உருவத்தைக் கண்டோ அல்லது தொட்டோ வணங்கும் வழக்கம் அமலுக்கு வரவேண்டும். பிராமணருக்கு முன்னிடம் தந்து, பிராமணரல்லாதாருக்குப் பின்னிடம் கொடுத்து, ஆதித் திராவிடர்களுக்கு அதையும் மறுத்து வரும் இந்நாட்டு வழக்கம் விரைவில் ஒழியவேண்டும். தமிழ்நாட்டுக் கோயில்களில் ‘கடவுள் வணக்கம்’ தமிழில் நடத்தப்படவேண்டும்.

ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், ஆறுகள், குளங்கள், சத்திரங்கள் முதலிய பொது நிலையங்களில் ஜாதி வேற்றுமையை நினைப்பூட்டும் பாகுபாடுகளோ அல்லது ஜாதிப் பூசல்களை வளர்க்கும் தனி உரிமைகளோ சட்டப்பூர்வமாய் நீக்கப்படவேண்டும். பெண்களுக்கு தகப்பன் சொத்தில் சம உரிமை உண்டென்று சட்டம் செய்தல் வேண்டும். சம உரிமையும் சம வாய்ப்பும் பெண்களுக்கு வழங்குவது எந்நாளோ அந்நாளே இந்நாட்டின் பொன்நாள் ஆகும் என்பது எனது கருத்து. ஏழைகளே எமது தோழர்கள்; பாட்டாளிகளே நமக்கு கூட்டாளிகள்; தாழ்த்தப்பட்டோரே நமது சகோதரர்கள்; இவர்களுக்குத் தொண்டாற்றுதலே நமக்குப் பேரானந்தம்” என்று முழங்கிய கனகம்மையாரின் திராவிட இயக்கச் சிந்தனையும், அன்றைய சமூகச் செயல்பாடும் எத்தகைய எதிர்ப்புகளை ஏற்படுத்தி இருக்கும், என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த திராவிட இயக்கப் போராளியின் கனவுகளை திராவிட இயக்கம் ஆட்சியிலும் சமுதாயத்திலும் செயல்படுத்தி வருகிறது.

(வருவார்கள்...)

### கல்வியாளர் கணவர்!

சேலம், திராவிட இயக்க வரலாற்றில் பல முதன்மையான நிகழ்வுகளைக் கண்ட நகரம். சேலத்துக்கு மேலும் சில சிறப்புகள் உண்டு. இந்தியாவிலேயே ஒரு நகராட்சியால் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி சேலம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி. 1857-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுப், பல சாதனையாளர்களை உருவாக்கிய அந்தக் கல்லூரியின் முதல்வராக 1927 முதல் 1950 ஆகஸ்டு வரை 23 ஆண்டு காலம் பணியாற்றியவர் மிகச் சிறந்த கல்வியாளரான இராமசாமி அவர்கள்.

ஆங்கிலேயர் இருவர், பார்ப்பனர்கள் மூன்று பேர் அடுத்தடுத்து முதல்வர்களாகப் பணியாற்றிய அந்தக் கல்லூரியின் முதல் பார்ப்பனரல்லாத முதல்வர். M.A.LT படித்தவர். தீவிர வைணவர். கொங்கு வெள்ளாளக் கவுண்டர். சாதிப் பெயருடனே அறியப்பட்டவர். ஆனால் தந்தை பெரியாரின் சுயமரியாதை, சமதர்மக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். அவரது அழைப்பின் பேரில், சேலம் அரசு கலைக்கல்லூரியில் தத்துவவியல் துறையில் பெரியார் அவர்கள் நிகழ்த்திய தனிப்பேருரை ஒன்று ‘தத்துவ விளக்கம்’ என்ற நூலாக வெளியிடப்பட்டது. இத்தகைய பெருமைக்குரிய இராமசாமி அவர்கள்தான் கனகம்மையார் அவர்களின் கணவர்.

1950-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் திடீரென்று இராமசாமி அவர்கள் மரணமடைந்தார். அவரது மறைவுக்கு ‘விடுதலை’ இதழில் தலையங்கம் எழுதப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘திராவிட நாடு’ ஏட்டில் உள்ளத்தை உருக்கும் இரங்கல் கட்டுரை ஒன்றை எழுதினார். அதன்பின் இரண்டு மகன்கள் ஒரு மகள் கொண்ட குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார் கனகம்மையார்.

### பூசாரிப் பெண்கள்!

மனிதகுல வரலாற்றில் ஆதியில் பெண்களே பூசாரிகளாக விளங்கினர். இதற்கான வலுவான சான்றுகள் சிலப்பதிகாரத்திலும் சங்க இலக்கியத்திலும் உள்ளன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில் கொற்றவையின் பூசாரி சாலினி ஆவாள்.

கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பாலை திணையில் கொற்றவைக் கோயில் அருகே இளைப்பாறினர். அங்குப் பூசை செய்ய வந்த சாலினி கண்ணகியைப் பார்த்து **“கொங்கமர் செல்வியே, குடமலை யாட்டியே, தென்தமிழ்ப் பாவையே, உலக மெல்லாம் போற்றும் திருமாமணியாக வருவாய்”** என வாக்குரைத்தாள். இன்றும் கிராமப்புறங்களில் அடித்தளப் பெண்கள் வாக்குரைப்பது சாலினி மரபின் தொடர்ச்சியாகும். ஆண் பூசாரிகளுக்கு முன்பு குறமகள்கள் (தேவராட்டிகள்) முருகனின் பூசாரிகளாக இருந்துள்ளதைத் திருமுருகாற்றுப்படை (228-249) கூறுகிறது. பின்னாளில்தான் முருகனுடைய பூசாரிகளாக வேலன்மார் வந்தனர்.

ஆதியில் வேலன்மார் முதன்முதலில் பூசாரியாகச் செயல்பட்ட போது அவர்கள் பெண் வேடமிட்டுப் பூசைகள் செய்தனர். அதன் பின்னர் மெல்ல மெல்ல பெண் வேடத்திலிருந்து விடுபட்டு, ஆண்களாகவே நின்று பூசைகள் செய்தனர். மனிதகுல வரலாற்றில் பூசாரியின் பரிணாமத்தைப் பேசுவதற்கு தமிழ் இலக்கியங்களே மிகச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

**-மானுடவியலாளர் முன்னாள் பேராசிரியர் பக்தவத்சல பாரதியின் ஃபேஸ்புக் பதிவு**

### ஃப்ளாஷ்பேக்



### கொடைக்கானலில் ‘சூரியன்’!

என் தந்தை கே.எம்.அம்சா அவர்கள் உதயசூரியன் சின்னத்தை நெஞ்சில் பச்சை குத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர். 1990-ஆம் ஆண்டு கொடைக்கானலில் மலர் கண்காட்சியைத் திறந்து வைக்க தலைவர் கலைஞர் அவர்கள் மே மாதம் 20-ஆம் நாளன்று வருகை தந்தார். அப்போது கொடைக்கானல் நகர இலக்கிய அணித் தலைவராக இருந்த என் தந்தை, தலைவருக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். உடன், சட்டமன்ற உறுப்பினர் எல்.மூக்கையா அவர்கள்.



ஷேக் அம்சா

**-ஷேக் அம்சா, வண்டன்மேடு, கேரளா.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**கண்ணியமான போராட்டங்கள்!**

**1958-ஆம் ஆண்டு மார்ச் 8 மற்றும் 9 தேதிகளில், மதுரை மாவட்ட தி.மு.க.வின் மூன்றாவது மாநாடு பழனியில் நடை பெற்றது. அந்த மாநாட்டில் ‘போராட்டம்’ என்கிற தலைப்பில், சத்தியவாணி முத்து அம்மையார் உரையாற்றினார். “நாம் நடத்தும் அறப்போராட்டங்களைப் போல அமைதியான முறையிலும், கண்ணியமான முறையிலும் போராட்டத்தை நடத்துபவர்கள் இந்தியாவிலேயே யாரையும் காட்ட முடியாது. இதற்குக் காரணமான நம் அண்ணாவை தலைவராகக் கொண்டதற்கு நாம் மிகவும் பெருமை அடைகிறோம்” என்று குறிப்பிட்டார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 280




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.